புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# சங்க இலக்கியங்களில் தமிழர் விளையாட்டுகள்

முனைவர் சே. சைய்யத் அபுதாகீர்,
இணைப்பேராசிரியர்,
தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,
புதுக்கல்லூரி, இராயப்பேட்டை, சென்னை – 14.

## முன்னுரை

சங்க காலத்தில் பெண்கள் உழவுத்தொழிலில் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். எனவே உழைப்பின் களைப்புத்தீர விளையாட்டினை மேற்கொண்டு மகிழ்ச்சியுடன் இன்பம் களித்தனர். அன்றாட வாழ்க்கையில் சிறந்த பொழுது போக்காகவும் விளையாட்டினை மேற்கொண்டு மகிழ்ச்சியடைந்தனர். சங்ககால மகளிர் பொழுது போக்கிற்காக அம்மானை என்னும் வண்ணப் பந்தாட்டம் ஆடுதல், ஆடிப்பாடுதல், பறவைகள் பேசும்குரல் கேட்டல், ஆண்களும் பெண்களும் சேர்ந்து விளையாடுதல் ஆகியவற்றில் ஈடுபட்டனர். குழந்தைகளைப் பார்த்து பாரதியார்.

”ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது – பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா”
(பாரதியார் கவிதைகள். ப. 232)

என்கிறார்.

இப்பாடலடிகள் மூலம் சிறுவயதிலிருந்தே நற்குணங்களைக் கற்க வேண்டும் என்பது குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது. சங்க கால மக்கள் பலவித விளையாட்டுக்களை மேற்கொண்டுள்ளனர் என்பதைச் சங்கப் பாடல்களின் மூலமாக அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## விளையாட்டு

விளையாட்டு என்பது மகிழ்ச்சி உணர்ச்சியோடு தொடங்கி மகிழ்ச்சி உணர்ச்சியோடு நிகழ்ந்து, மகிழ்ச்சி உணர்ச்சியோடு முடிவது (பெருமாள், க. விளையாட்டுக்கலை. ப. 9) என் பெருமாள் குறிப்பிடுகின்றார்.

பெண்கள் தத்தம் பருவத்திற்கும், வளர்ச்சிக்கும் ஏற்றவாறு கழங்கு, அம்மானை, பந்து, ஊஞ்சல், முதலிய விளையாட்டுக்களை விளையாடுவார்கள், பேதை, பெதும்மை, மங்கை மடந்தை, அரிவை, தெரிவை பேரிளம்பெண் என்ற ஏழு பருவ மகளிரையும் அவரவர்களின் வயதுக்கும், இயல்புக்கும் ஏற்றபடி வர்ணிக்க வேண்டும் என்றும் அப்படி வர்ணிக்கும் போது அவ்வப்பருவங்களுக்குரிய செய்லகள் விளையாட்டுக்கள் இவைகளைப் பற்றியும் கூறவேண்டும் என்றும் பிரபந்தங்களில் ஒன்றான உலர்வுக்காக இலக்கண விதிகள் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. இந்த வகையில் சிற்றில், பேதைப் பருவத்திலும், பந்து மங்கைப் பருவத்திலும், அம்மானை அரிவைப் பருவத்திலும், தொழில் விளையாட்டு பேரிளம் பெண் பருவத்திலும் விளையாட்டுப்படுபவை என்று உலாவிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

## குறிஞ்சித் திணை விளையாட்டுகள்

குறிஞ்சித் திணையில் திணைப் புனங்காப்பது குல மரபாகும். தலைவி களவு வாழ்க்கை மேற்கொள்ளும் களமாக திண்ப்புனத்தை எண்ணி மகிழ்கின்றான். தினைப்பினக்காவல்

*கடமைக்கு இடையே சிறிது நேரம் விளையாட்டுக்களில் ஈடுபட்டு தோழியருடன் இணைந்து ஆரவாரம் எழுப்பி மகிழ்ச்சி அடைகின்றனர். மலர் கொய்தும் புனலாடியும் மாலையாகத் தொகுத்து விளையாட்டுப் பொருளாகவும் பயன்படுத்தி விளையாடி இன்பம் காணுகின்றனர். 1. புனலாடுதல் 2. பூக்கொய்தல் – போன்ற விளையாட்டுக்கள் குறிஞ்சி நில விளையாட்டுக்களாக அகநானூற்றில் வெளிப்படுகின்றன.*

*புனலாடுதல்*

*புனலாடுதல் என்பது, நீராடி மகிழ்தல் ஆகும். தோழியருடன், தன் தலைவனுடன் சென்று தலைவி புனலாடி மகிழ்கின்றாள், தலைவன் பிரிந்திருக்கையில் பிரிவுத்துன்பத்தைப் போக்கு வகையில் அத்துன்பத்தை மறந்து விளையாட்டில் மூழ்கி, மகிழ்ச்சி பெறுகின்றாள். தலைவனும் தலைவியும் கணையில் நீராடி மகிழ்ந்தனர் என்பதை,*

*" பிரசப் பல்கினை யார்ப்பக் கல்லென*
*வுரையிழி யருவி ஆரந்தீண்டித்*
*தண்ணென நனைக்கு நளிமலைச் சிலம்பிற்*
*கண்ணென மலர்ந்த மாயிதழ்க் குலளைக்*
*கன்முகை நெடுஞ்சுனை நம்மோ டாடி"(அகம் – 228)*

*என்ற இப்பாடலடிகள் உணர்த்துகின்றன. தலைவனும் தலைவியும் சந்திப்பதற்குத் தோழி முக்கியக் காரணமாகஅமைகின்றாள். புனலாடி மகிழ்ச்சி பெருக விளையாடிய தலைவன் இன்று நம்மை மறந்து இருக்க முடியாது என்று தோழி குறிப்பிடுகிறாள்.*

*சமூகக் கடமையும் ஒழுக்கமும் இருபாலமும் மீற முடியாத சமூக மரபாகும். குழுச்சமூகத்தில் குலமரவு, நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைத் தலைவன் முதல் கடைக்கோடிக் குடிமகன் வரை புறந்தள்ள முடியாது. குறிஞ்சி நிலத்திற்குரிய தொழிலான திணைப்புனக் காவல் குலமரபாகும். இந்நிகழ்ச்சி களவு வாழ்க்கைக்கு களம் அமைத்துத் தந்து உதவுவதை,*

*"விளையாடிய மொடு ஒரை யாடாது*
*இளையோர் இவ்விடத்திற் செறித் திருத்தல்*
*அறனும் அன்றே ஆக்கமுந் தேய்ம்மெனக்*
*குறுநரை சுமந்து நறுமலர் உந்திப்*
*பொங்கிவரு புதுநீர் நெஞ்சுனை ஆடுக"*

*(நாராயணசாமி. நற்றிணை பா. எ.68)*

*என்னும் நற்றிணைப் பாடலடிகள் உணர்த்துகின்றன. புனலாடும் பொழுது ஓடிப்பிடித்து விளையாடுவது, தொட்டு விளையாடுவது கண்மூடி விளையாடுவது. நீர் தெளித்து விளையாடுவது போன்ற முறைகளைக் கையாண்டு நீர் விளையாட்டினை மனமகிழ்ச்சியுடன் களித்தனர்.நீரில் ஆடிமகிழ்தல் இன்பம் தரும் பொழுதுபோக்கு. பொங்கி வரும் புதுப்புனில் குடைந்து மகளிர் ஆடியதை.*

*"நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்கம் புகுதொறும்*
*புனலொடு மகளிர் கதுமென் குடைய"*

*(சாமிநாத ஐயர் உ.வே. பொருநராற்றுப்படை, 240 – 241)*

*என்று பொருநராற்றுப்படைப் பாடலடிகள் சுட்டுகின்றன. மகளிர் விளையாட்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி மனமகிழ்ச்சியாக இருந்ததைப் பின்வரும் பாடலடிகள் காட்டுகின்றன.*

*"வெய்ய திமிலின் விரைபுனலோடு ஆய்வாரும்*
*மெய்ய துழவின் எதிர்புனல் மாருடிப்*
*பைய விளையாடு வாருமென் பாவையர்"*
*(நாராயணசாமி – பரிபாடல் பா. எ. 10)*

*என்ற பரிபாடலடிகள் பாவையர் விரைந்து வரும் புனலின் போக்கை புனையின் துணையோடு எதிர்த்து முன்னேறினர். சிலர் வெற்றுக்கைகளால் துழாவி எதிரேறித் களித்தனர் என்று குறிப்பிடுகின்றனர்.*

பூக்கொய்தல்

பெண்கள் பெரிதும் விரும்பியணியக் கூடியது பூவும் பொட்டும் தான். மங்கலகரம் என்று மூதாதையர்கள் இதனை குறிப்பிடுகின்றனர். பூக்களைப் பறித்து. தானே அப்பூக்களைக் கோர்த்து கூந்தலில் குடிக்கொள்ளும் பெண்களை சங்ககாலம் முதல் இன்றளவும் காணமுடிகின்றது. பெண்கள் வேலை நேரங்கள் போக மற்ற நேரங்களில் செடிகளிலும் கொடிகளிலும் மலர்ந்துள்ள பலவகை மலர்களைப் பறித்து மாலையாகத் தொடுத்து மகிழ்ச்சியாக விளையாடினர். பெண் பிள்ளைகள் சேர்ந்து விளையாடுவது இயல்பு. மனமகிழ்ச்சிக்குரிய எளிமையான விளையாட்டினை மேற்கொண்டிருந்தனர்.

சங்ககாலத்தில் நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கொட்டுப்பூ என்பன வழக்கில் இருந்தன. தலைவன் அன்பின் அடையாளமாக கையுரையாக பூ தருதலைக் காணமுடிகிறது. தானே பறித்துத் தொடுத்துச் சூடுவதைக் காணமுடிகிறது. தானே பறித்துத் தொடுத்துச் சூடுவதைக் காட்டிலும் தலைவன் , தலைவிக்கு கையுரையாகத் தந்த மலருக்கு அத்தகைய சிறப்பு உண்டு.

“செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று

அல்லல் நீத்த உவகை நான்கே”

(இளம் பூரணர், தொல்காப்பிம் (உ.ஆ) மெய்.நூ. பா. 225)

என்னும் செய்தி உணர்த்துகிறது. விளையாட்டு மகிழ்ச்சியை மையமிட்டதாகும். இந்நிலை காலப் போக்கில் நிலைமாறி மையமிட்டதாகும். இந்நிலை காலப் போக்கில் நிலைமாறி போட்டி, பந்தயமாக உருவெடுத்தது. கால வேகத்தில் யார் சிறந்தவன், பெரியவன் என்ற நிர்ணயம் செய்யப் பெற்றது. விளையாட்டு வரன்முறைப் படுத்தப்பட்டு நடுவரின் தீர்ப்பு முதன்மையாகப் பின்பற்றப்பட்டது. ஐவகை நிலங்களில் குறிஞ்சி, முல்லை, மருத நிலமகளிர் எவ்வகை விளையாட்டுக் களை மேற்கொண்டனர் என்பதை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

கழங்கு

தலைவன் பிரிந்திருக்கையில் தலைவி தோழியரோடு விளையாடாமல் துன்புறுகின்றாள். அதை நினைத்து தலைவன் மிகவும் மனச்சளிப்பு அடைகின்றான். தோழியர் தன் ஆயத்தாரோடு சேர்த்து விளையாடி மனமகிழ்வு அடைந்தனர்.

“துணையொடு குறும்பாறை பயிற்று மென்மெல
விளையா டாயத் திளைமீடர்க் காண்டொறு
நம் வயினி னினையு நன்னுத லரிவை” (அகம்- 254)

எனும் இவ்வடிகள் தலைவி தலைவனின் வருகைக்காகவே காத்துக் கொண்டிருந்த வேளையில் முன்னர் நடந்த மகிழ்ச்சியான நினைவுகளை நினைத்து மனம் இன்புற்றத்தைக் காட்டுகிறது.

தோளி

சங்ககாலத்தில் தோளி என்னும் விளையாட்டு மிகவும் குறைவானதாகவே இருந்திருக்கின்றது. வேறு இலக்கியங்களிலும் இவ்விளையாட்டுப் பற்றிக் கூறுவது குறைவானதாகவே உள்ளது. மகளிர் வரிசையாக நின்று விளையாடும் விளையாட்டு தோளி என்னும் விளையாட்டாகும். இவ்விளையாட்டு மயிற் கூட்டங்கள் போன்று காட்சி தரக் கூடியதாக அமைகின்றதனை,

“வையேர் வாலெயிற் றொண்ணுதன் மகளிர்
கைமாண் தோளி கடுப்பப் பையென
மயிலின மாலு மரம்பயில் கான ” (அகம் – 344)”

என்னும் இவ்வடிகளின் முலம் உணரமுடிகிறது. தோளி என்னும் விளையாட்டு மகளிர்க்கே உரித்தானதாக அமைந்திருக்கின்றது என்றும், இவ்விளையாட்டு அதிகமாக வேறு இலக்கியங்களில் பேசப்படவில்லை என்றும் காணமுடிகின்றது.

தாய்மார்கள் அழும் சிறுமிகளுக்குப் பூத்து நின்ற வேங்கை மரத்தைச் சுட்டிப் புலிபுலி என்று கூறி அழுகையை நிறுத்துகின்றனர். (அன்னிதாமசு, சங்ககாலப் பெண்டிர். ப. 88) என அறிய முடிகின்றது. சிறுவர்கள் வேங்கை மலரைப் பறித்து விளையாடினர். மலர் கொய்யச் சென்ற மகளிர் மலரைக் கண்டு அஞ்சி ஓடி ஒழிந்து கொண்டனர் என்பதை அறிய முடிகின்றது. நற்றிணையில் மலர் கொய்துவிளையாடி மகளிர் மனமகிழ்ச்சியோடு இருப்பதை,

“கொடுங்கழி மருங்கின் அடும்பின்

*மலர் கொய்து பின் "( நாராயணசாமி – நற்றிணை –பா.எ.76)*
*என்ற பாடலடிகளினால் அறியலாம். மலர் கொய்த பெண்கள் ஆடிப் பாடி விளையாடி மகிழ்ச்சி அடைந்தனர் என்பது புலனாகிறது.*

*முல்லைத் திணை விளையாட்டுக்கள்*

*முல்லை நிலத் தலைவன் போரின் காரணமாகத் தலைவியைப் பிரிகின்றான். தலைவனைப் பிரிந்த துயரால் எவ்வித மகிழ்ச்சியும் இன்றி மன வருத்ததுடன் தலைவனின் வருகைக்காக காத்துக் கொண்ருக்கும் செய்தியே இத்திணையில் மிகுதியாய்க் காட்சியளிக்கின்றது. 1. கழங்கு 2. தோளி 3. கூட்டாஞ்சோறு சமைத்தல் போன்ற விளையாட்டுக்கள் முல்லை நில விளையாட்டுக்களாக அகநானூற்றில் வெளிப்படுகின்றன அறிய முடிகின்றது. சிறுசிறு மனஉளைச்சல், கோபம் வந்தாலும் அப்பொழுதே சமாதானம் அடை,நதிருக்கின்றனர். இதன் வழி சங்க கால மக்கள் அன்பு நிறைந்த உள்ளங்களாக வாழ்ந்திருக்கின்றனர் என்பதை உணர முடிகின்றது.*

*புனலாடுதல்*

*மருதநில மகளிர், புனலாடும் பொழுது இவ்விளையாட்டு சலிப்பாக இருந்தால், நீர் நிலையில் உள்ள கோரைகளைப் பறித்துக் கொண்டு கழனியில் கரந்தைக் கொடி படர்ந்திருக்கும் வயல்களில் இறையினைத் தேடும் நாரையை ஓட்டி விளையாடினர் என்பதை,*

*"குறுந்தொடி மகளிர் குரூஉப்புனன் முனையிற்*
*பழனப் பைஞ்சாய் கொழுதிக் கழனிக்*
*கரந்தையஞ் செறுவின் வெண்குருகு ஓப்பும்" (அகம் – 226)*

*இப்பாடலடிகள் புலப்படுத்துகின்றன. பரத்தையருடன் சென்று தலைவன் புனலாடிய செய்தியை இதன் வழி உணரமுடிகின்றது. தலைவன் பரத்தையருடன் மகிழ்வதற்கு சமூகத்தில் எவ்விதத் தலைவன் பரத்தையருடன் மகிழ்வதற்கு சமூகத்தில் எவ்விதத் தடையும் இல்லை என இதன்வழி அறிய முடிகின்றது. பெண்கள் நுரையுடன் கூடி வரும் வையை ஆற்றில் புனலாடியும், பூக்களை எறிந்தும் மனமகிழ்சியினை வெளிப்படுத்தினர் என்று,*

*"இறுவரை புரையுமாறு இருகரை ஏமத்து*
*வரைபுரை உருவின் நுரைபல சுமந்து*
*புவேய்ந்து பொழில் பரந்து*
*துனைந்து ஆடுவார் ஆய் கோதையர்"*
*(நாராயணசாமி பரிபாடல் பா. எ.7)*

*பூக் கொய்தல்*

*தெய்வத்தை வழிபாடு செய்வதற்காக பெண்கள் பூக்களைப் பறித்து இறைவனுக்குப் படைத்தனர். மாலையாகத் தொடுத்து கழுத்திலிட்டு மகிழ்ச்சியடைந்து விளையாடினர். அழகிய அணிகலன்களை அணிந்து கொண்டு மலர்களைப் பறிக்கச் சென்றதன் மூலம், அச்சமின்றி பெண்கள் வெளியில் தனியாகச் சென்றிருக்கின்றனர் என்பது அறிப்படுகிறது. பெண்கள் மடல்களைப் பிறத்து விளையாடி மகிழ்ந்தனர் என்பதை,*

*" கூர்முன் முள்ளிக் குவிகுலை கழன்ற*
*மீன்முள் ளன்ன வெண்கான் மாமலர்*
*பொய் தன் மகளிர் விழவணிக் கூட்டும்*
*அவ்வயல் நண்ணிய விளக்கே "(அகம் – 26)*

*என இப்பாடலடிகளில் கண்டுணரமுடிகின்றது. மகளிர் ஆயத்தாருடன் கூடி விளையாடி மகிழும் நிகழ்வு பதிவு செய்யப் பெற்றுள்ளது. சங்க கால மகளிர் ஒற்றுமைப் பண்புடனும், விட்டுக் கொடுக்கும் மனத்துடனும் சிறந்து விளங்கினர். மகளிர் மலரினைக் கொய்த செய்தி பதிற்றுப்பத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளதை,*

*"வளைக்கை மகளிர் வள்ளை*
*கொய்யும்"*
*(நாராயணசாமி – பதிற்றுபத்து – பா.எ. 29)*

*என்ற பாடிலடியின் மூலம் உணர முடிகிறது.*

*“சங்ககாலத்தில் இருபாலர் விளையாட்டுக்கள் கூடப் பெண்களை மையப்படுத்தி நிகழ்ந்துள்ளன. இதனை ஆழமாக எண்ணிப் பார்க்கும் பொழுது இன்பம் பெறுதல் என்பதே சங்கத் தமிழரின் விளையாட்டுக் கொள்கையாக இருக்க வேண்டுமென எண்ணத் தோன்றுகிறது (சிவகாமசுந்திரி. சு. சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம் ப. 9) என சிவகாம சுந்திரி கூறுகிறார்.*

*பத்துப்பாட்டில் விளையாட்டுகள்*

*இளமகளிர் பாவை செய்து விளையாடினர்; நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தை எறிந்தும் அடித்தும் விளையாடினர். (திருமுருகு. அடி, 68). சோழநாட்டு உழவர் மகளிர், நெய்தல் நிலத்து மணற்குன்றுகளில் வண்டல் இழைத்து விளையாடினர் (பொ.ஆ. படை, அடி, 187). வண்டல் – மணற்சிற்றில் தொண்டை நாட்டு மருத நிலப் பேரூர்களில் சிறுவர் பிறரால் ஏறப்படாத சிறிய தேர்களை உருட்டி விளையாடினர் (பெ.ஆ. படை, அடி, 248 – 249). தொண்டை நாட்டுத் துறைமுக நகரத்துச் செல்வச் சிறுமியர் தமது வளமனையின் மேல் மாடத்தில் நூலினால் வரிந்து கட்டப்பட்ட பந்தை அடித்து விளையாடினர் (அடி,331-333). வெண்மணலிலே அமர்ந்து பொன்னால் செய்த கழலைக் கொண்டு விளையாடினர் (அடி, 334-5). குட்டங்களில் நீராடுவோர் தம் கையை மேலே கூப்பி முழுகி நீரின் ஆழத்தைக் காட்டுதல் மரபு (பெ.ஆ.படை, அடி, 272-3).*

*மதுரை மாநகரில் ஞாயிறு மறைந்த பின்பு முதல் யாமத்தில் வீரர் சிலர் போர்ப்பயிற்சி கொண்ட யானையை தம்மைத் தொடர்ந்து வந்து பிடிக்கும் படி ஏவினர். அது தம்மைப் பின் தொடர்ந்த போது,அதன் போக்கைத் தடுக்கத் தம் மடியிலிருந்த கப்பணங்களைத் தரையில் சிதறிவிட்டனர். ‘கப்பணம்’ என்பது, ஆனை நெருஞ்சி முள் போல இரும்பால் செய்யப்பட்ட கருவி யானை அவற்றை மிதிக்க அஞ்சி நின்றுவிட்டது. இஃது அக்கால வீரர் கட்கு ஒரு விளையாட்டாய் இருந்தது (ம.கா.அடி, 594-599).*

*குறிஞ்சி நிலமகளிர் சுனையில் நீராடினர்; மலை அருவிகளில் விளையாடினர்; தம் மனத்துக்கு விருப்பமானவற்றை பாடிக் கொண்டே கூந்தலை உலர்த்தினர்;*

*கோடற்பூ, ஆம்பற்பூ, குறிஞ்சிப்பூ முதலிய தொண்ணூற்றுக்கு மேற்பட்ட குறிஞ்சியில் நில மலர்களைப் பறித்தனர்; அவற்றைப் பாறையிலே குவித்தனர்; பல மாலைகளாகத் கட்டித் தம் கரிய முடியிலே அழகு பெறச் சூடிக் கொண்டனர் (கு.பா.அடி,54-106). சோழகாட்டு ஊர்களில் சிறுவர், குதிரை பூட்டால் கையால் உருட்டும் மூன்று உருகைளையுடைய சிறு தேரினை வைத்து விளையாடினர்.*

*பூம்புகார் நகரத்தில் மீனவர் பிள்ளைகள் மணலிலே படர்நதே அடம்பம்பூவைத் தலையிலே கட்டியும், நீரில் நின்ற ஆம்பற்பூவைப் பறித்துச் சூட்டியும், தங்கள் மன்றிலே ஆட்டுக்கிடாய்ப் போரையும் கவுதாரிப் போரையும் கண்டு களித்தார்கள் (ப. பாலை, அடி, 61-77), கடலிடைச் சென்று மீன் பிடித்து வாழ்ந்த பரதவர், உவா நாளில் மீன் பிடிக்கச் செல்லார்; அதற்கு மாறாக ஆடியும் பாடியும் பொழுதைக் கழித்தனர். அவர்கள் கொம்பை நட்டு, வெண்டாளி மலர் மாலையினையும் தாழை மலரையும் சூடிப் பனங்களையும் நெற்கள்ளையும் உண்டு விளையாடினார்கள்; காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் கடலாடினார்கள்; உடம்பிற்படிந்த உப்புப் போகும்படி காவிரியில் நீராடினார்கள்; நண்டுகளைப் பிடித்து விளையாடினார்கள்.*

*பாவைகளைப் பண்ணி விளையாடினார்கள்; ஐம்பொறிகளால் நுகரும் பொருள்களை நுகர்ந்து மயங்கினார்கள்; நீங்காத விருப்பத்துடனே பகற்பொழுதெல்லாம் விளையாடினார்கள் (அடி, 90-103.)*

*முடிவுரை*

*சங்க இலக்கியங்களில் விளையாட்டு மக்கள் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்திருப்பதை உணர முடிகின்றது. விளையாட்டுக்களில் மனித நேயப் பண்பு மேலோங்கிக் காணப்படுகின்றது.*

*சங்க இலக்கியங்களில் இடம் பெற்ற விளையாட்டுக்கள் காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும், புராணங்களிலும் தொடர்ந்து குறிப்பிடுகின்றன.*

*இப்பம் பெறுவதற்காகவே விளையாட்டு என்ற கொள்கை தமிழர் தம் விளையாட்டுக் கொள்கையாக இருந்து வந்துள்ளது என்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.*

துணை நூற்பட்டியல்


1. *சாமிநாதையர், உ.வே. பத்துப்பாட்டும் நச்சினார்க்கினியர் உரையும், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை – 10.*
2. *துரைசாமி பிள்ளை, ஔவை சு. (உரை), ஐங்குறுநூறு, மற்றும் புறநானூறு, அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு, 1978.*
3. *இராசாராம், துரை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், முல்லை நிலையம், தி.நகர், சென்னை – 17.*
4. *சிவகாம சுந்திரி, சு. சங்க இலக்கிய விளையாட்டு களஞ்சியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை , 1995.*
5. *அன்னிதாமசு, சங்க கால பெண்டிர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 113.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********